வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : நாராயணசாமி

தேதி 27.07.2025 நேரம் மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

தமிழகத்தில், முதலாம் ராஜேந்திர சோழனை கவுரவிக்கும் ஆடி திருவாதிரை விழாவில், பிரதமர் திரு. நரேந்திர மோடி பங்கேற்றார்.

முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏபிஜே அப்துல் கலாமின் நினைவு தினத்தை ஒட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடி அவருக்கு அஞ்சலி செலுத்தினார்.

இந்தியாவின் மதிப்பு சர்வதேச அளவில் உயர்ந்து வரும் நிலையில், வரும் ஆண்டுகளில், தேசப் பாதுகாப்பு சவால்களும் அதிகரிக்கும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

விண்வெளி வீரர் சுபான்ஷு சுக்லா பூமிக்கு திரும்பியது தேசத்தின் பெருமை என்று, மனதின் குரல் நிகழ்ச்சியில் பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

---

*மோடி-கங்கை கொண்ட சோழபுரம் (11)*

மத்திய அரசின் கலாச்சார அமைச்சகத்தின் சார்பில், கங்கை கொண்ட சோழபுரத்தில், முதலாம் ராஜேந்திர சோழனின் பிறந்தநாளை

ஒட்டி நடைபெறும் ஆடி திருவாதிரை திருவிழாவில், பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று பங்கேற்றார். முன்னதாக அங்குள்ள திருவுடையார் கோவிலில், பூரண கும்ப மரியாதையுடன் சாமி தரிசனம் செய்தார். பின்னர், கோவில் சிற்பங்களையும், மத்திய தொல்லியல் துறை சார்பில் அமைக்கப்பட்ட புகைப்பட கண்காட்சியையும் அவர் பார்வையிட்டு, ராஜேந்திர சோழனின் நினைவு நாணயத்தையும் வெளியிட்டார். நிகழ்ச்சியில் பேசிய அவர், 140 கோடி இந்தியர்களின் நலனுக்காகவும், இந்தியாவின் தொடர்ச்சியான முன்னேற்றத்திற்காகவும், பிரார்த்தனை செய்ததாக, கூறினார். ராஜராஜ சோழன், மற்றும் ராஜேந்திர சோழனின் பெயர்கள், இந்தியாவின் அடையாளம், மற்றும் பெருமைக்கு உகந்தவை என்றும், பிரதமர் தெரிவித்தார்.

மோடி – தமிழகம் 1 (8)

வளர்ந்த இந்தியா, வளர்ச்சி அடைந்த தமிழ்நாட்டை உருவாக்குவோம் என பிரதமர் திரு, நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். மாலத்தீவு பயணத்தை முடித்துக் கொண்டு, தனி விமானம் மூலம் தூத்துக்குடி வந்த பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு, விமான நிலையத்தில் அன்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. பின்னர், 381 கோடி ரூபாய் செலவில், சர்வதேச தரத்தில் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ள தூத்துக்குடி விமான நிலையத்தை, திறந்து வைத்து, பார்வையிட்டார். இதுகுறித்த ஒரு செய்தித் தொகுப்பு.....

(வாய்ஸ்)

மோடி – தமிழகம் 2 (19)

(வாய்ஸ்)

தமிழகத்தில் 2 நாள் சுற்றுப் பயணம் மேற்கொண்டு வரும் பிரதமர் திரு. நரேந்திர மோடி, தூத்துக்குடியில் நடைபெற்ற விழாவில், விரிவாக்கம் செய்யப்பட்ட தூத்துக்குடி புதிய விமான முனையம், சோழபுரம் முதல் சேத்தியாதோப்பு வரை அமைக்கப்பட்டுள்ள தேசிய நெடுஞ்சாலை திட்டம், 6 வழி சாலையாக மாற்றப்பட்டுள்ள தூத்துக்குடி துறைமுக சாலைத் திட்டம், மதுரை- போடிநாயக்கன் இடையே மின்மயமாக்கப்பட்டுள்ள ரயில்வே சாலை, நாகர் கோவில்-கன்னியாகுமரி இடையே இரட்டை ரயில் பாதைத் திட்டம், வ.உ.சி துறைமுகத்தில் கட்டப்பட்டுள்ள புதிய சரக்கு கையாளும் தளம் உள்ளிட்ட, மொத்தம் 4 ஆயிரத்து 800 கோடி ரூபாய்க்கும் மேல் மதிப்புடைய முடிவுற்ற திட்டங்களை பிரதமர் தொடக்கி வைத்தார். கூடங்குளம் அணுமின் நிலையத்தில், புதிதாக அமைய உள்ள மின் பரிமாற்ற கட்டமைப்பிற்கும் பிரதமர் அடிக்கல் நாட்டினார். நிகழ்ச்சியில் பேசிய பிரதமர், தமிழ்நாடு, முன் எப்போதும் இல்லாத வளர்ச்சியை கண்டு வருவதாக கூறினார். தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லும் பயணம், கடந்த 2014ஆம் ஆண்டு தொடங்கியதாகவும் அவர் தெரிவித்தார். எந்தவொரு மாநிலத்தின் வளர்ச்சிக்கும், உள்கட்டமைப்பு மேம்பாடு, எரிசக்தித் துறை வளர்ச்சி முதுகெலும்பாக அமைகிறது என்றும் பிரதமர் தெரிவித்தார். கடந்த 11 ஆண்டுகளாக இத்துறைகளில் மத்திய அரசு கவனம் செலுத்தி வருவதாகவும் பிரதமர் தெரிவித்தார். கடந்த

மோடி – தமிழகம் 3 (12)

ஆண்டு பிப்ரவரி மாதம், தூத்துக்குடியில் பல நலத் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியதுடன், முடிவடைந்த திட்டங்களை இன்று நாட்டுக்கு அர்ப்பணித்ததாகவும் பிரதமர் தெரிவித்தார். இன்று 4 ஆயிரத்து 900 கோடி ரூபாய் மதிப்பீட்டில், இதேபோல் திட்டம் தொடங்கப் பட்டுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார். தமிழ்நாட்டின் உள்கட்டமைப்பை நவீனமயமாக்கும் வகையிலும், துறைமுக உள்கட்டமைப்பை, உயர் தொழில்நுட்பமாக மாற்றும் வகையிலும், விமான நிலையங்கள் மற்றும் சாலைகளை ஒருங்கிணைக்கும் நடவடிக்கைகளில் தமது அரசு ஈடுபட்டு வருவதாக அவர் தெரிவித்தார். இந்தியா மீது சர்வதேச சமூகம் பெற்றுள்ள நம்பிக்கை, புதிய தன்னம்பிக்கையின் சின்னமாகும் என்றும் பிரதமர் தெரிவித்தார். இதன்மூலம் நாம், வளர்ந்த இந்தியாவையும், வளர்ந்த தமிழ்நாட்டையும் உருவாக்குவோம் என்றும் பிரதமர் கூறினார்.

--------------------------------

*அப்துல் கலாம் நினைவு நாள் (9)*

முன்னாள் குடியரசுத் தலைவரும், புகழ்பெற்ற விஞ்ஞானியுமான டாக்டர் ஏபிஜே அப்துல் கலாமின் நினைவு தினம், இன்று கடைபிடிக்கப் படுகிறது. இதனையொட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடி அவருக்கு அஞ்சலி செலுத்தினார். இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள சமூக ஊடகப் பதிவில், டாக்டர் கலாம் ஒரு ஊக்கமளிக்கும் தொலைநோக்குப் பார்வையாளர், சிறந்த விஞ்ஞானி, வழிகாட்டி, மற்றும், சிறந்த

தேசபக்தராக விளங்கியவர் என்றும், தெரிவித்துள்ளார். டாக்டர் கலாமின் எண்ணங்கள், நாட்டின் இளைஞர்களை, வளர்ந்த மற்றும் வலுவான இந்தியாவை உருவாக்க ஊக்குவிக்கும் என்றும், அவர் குறிப்பிட்டுள்ளார்.

--------------------------------

*அமித் ஷா* (10)

இந்தியாவின் மதிப்பு சர்வதேச அளவில் உயர்ந்து வரும் நிலையில், வரும் ஆண்டுகளில், தேசப் பாதுகாப்புசவால்களும் அதிகரிக்கும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார். புதுடெல்லியில் நடைபெற்ற 8ஆவது தேசிய பாதுகாப்பு உத்திகள் தொடர்பான கருத்தரங்கில் பங்கேற்று பேசிய அவர், உள்நாட்டுப் பாதுகாப்பு சவால்களை எதிர்கொள்ளும் வகையில், ஒவ்வொரு மாநில காவல் துறை, மற்றும், மத்திய நிறுவனங்களும், சிறப்பாக செயல்பட வேண்டும் என கேட்டுக் கொண்டார். போதைப் பொருள் கடத்தல் கும்பல்களுக்கு எதிரான நடவடிக்கைளில், புதிய அணுகுமுறையை மேற்கொள்வது அவசியம் என்றும் அவர் தெரிவித்தார்.

--------------------------------

*மன் கீ பாத் 1 (18)*

விண்வெளி வீரர் சுபான்ஷூ சுக்லா பூமிக்கு திரும்பியது தேசத்தின் பெருமை என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். ஆகாஷ்வாணியில் இன்று காலை நடைபெற்ற மன் கீ பாத் நிகழ்ச்சியில், நாட்டு மக்களுடன் உரையாற்றிய அவர், 21ஆம் நூற்றாண்டு இந்தியாவில்

அறிவியல், புதுப்பிக்கப்பட்ட சக்தியுடன் முன்னேறி வருவதாக குறிப்பிட்டார். குழந்தைகள், அறிவியல் மற்றும், விண்வெளியில் ஆர்வம் காட்டத் தொடங்கி விட்டதாகவும், விண்வெளி விஞ்ஞானிகளாக வேண்டும் என்ற லட்சியங்களை வளர்த்துக் கொண்டுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார். குழந்தைகளிடையே புதுமைகளை ஊக்குவிப்பதற்காக, இன்ஸ்பயர் மனாக் அபியான் என்ற பிரச்சாரம் தொடங்கப் பட்டுள்ளதாகவும், இந்த முயற்சியில் இதுவரை, லட்சக்கணக்கான குழந்தைகள் பங்கேற்று இருப்பது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்றும் பிரதமர் கூறினார். விண்வெளித் துறையில் கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பு 50ஆக இருந்த ஸ்டார்ட்-அப்-களின் எண்ணிக்கை, தற்போது 200ஆக உயர்ந்துள்ளது என்றும் பிரதமர் தெரிவித்தார். வரும் ஆகஸ்ட் மாதம் 23ஆம் தேதி, தேசிய விளையாட்டு தினம் கொண்டாடப்பட உள்ள நிலையில், இந்நாளை எவ்வாறு கொண்டாடுவது என்பது குறித்து, நமோ செயலி மூலம், கருத்துக்களை பகிர்ந்து கொள்ளுமாறு பிரதமர் கேட்டுக் கொண்டார்.

*மன் கீ பாத்* 2 (4)

12 மராட்டிய ராணுவத் தலங்களுக்கு கிடைத்துள்ள யுனெஸ்கோ அங்கீகாரத்தில், தமிழகத்தில் உள்ள செஞ்சி கோட்டையும் இடம்பெற்றிருப்பது அனைவருக்கும் மகிழ்ச்சிஅளிப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். இதுகுறித்த ஒரு செய்தித் தொகுப்பு….

(வாய்ஸ்)

*மன் கீ பாத்* 3 (18)

(வாய்ஸ்)

நாட்டு மக்களுடன் தமது எண்ணங்களை பகிர்ந்து கொள்ளும் மனதின் குரல் நிகழ்ச்சியில், இன்று பங்கேற்று பேசிய பிரதமர், முகலாயர்கள் தோற்கடிக்கப்பட்ட சல்ஹார் கோட்டையில் இருந்து, சத்ரபதி சிவாஜி மகாராஜ் பிறந்த சிவனேரி கோட்டை வரை, ஒவ்வொரு கோட்டையும் ஒரு வளமான வரலாற்றை கொண்டுள்ளதாக, பிரதமர் தெரிவித்தார். தாக்குதல்களையும், வானிலையில் மாறுபாடுகளையும் தாங்கி நின்ற குறிப்பிடத்தக்க கோட்டைகள், இந்தியா முழுவதும் உள்ளன என்றும், பிரதமர் குறிப்பிட்டார். சித்தோர்கர் கோட்டை, கும்பல்கர் கோட்டை, ரன்தம்பூர் கோட்டை, அமர் கோட்டை, ஜெய்சால்மர் கோட்டை, குல்பெர்கா கோட்டை மற்றும் சித்ர துர்கா கோட்டை ஆகியவற்றையும் பிரதமர் குறிப்பிட்டார். உத்தரபிரதேசத்தின் பந்தாவில் உள்ள கலிஞ்சர் கோட்டையை, முகமது கஸ்னவி, பலமுறை தாக்கியதாகவும், ஆனால் ஒவ்வொரு முறையும் அவர் தோல்வி அடைந்தார் என்றும் பிரதமர் குறிப்பிட்டார். பண்டேல்கண்டில், பல கோட்டைகள் உள்ளன என்றும், குவாலியர், ஜான்சி, தாதியா, அஜய்க்கர், கர்க்குந்தர் மற்றும் சந்தேரி ஆகியவை, இந்தியாவின் பாரம்பரியத்தின் அடையாளங்கள் என்றும், அவற்றை, பார்வையிட்டு, வரலாற்றை அறிந்து கொள்ளுமாறு, மக்களை அவர் கேட்டுக் கொண்டார்.

*மன் கீ பாத்* 4 (11)

பிரதமர் திரு. நரேந்திர மோடி தமது மனதின் குரல் நிகழ்ச்சியில், மஹாராஷ்ட்ர மாநிலம் சத்ரபதி சாம்பாஜி மாவட்டத்தில் உள்ள பைத்தானி புடவைகளின் பாரம்பரிய கைவினைத் திறனை பாராட்டி உள்ளார். மயில் வடிவமைப்புகளுக்கு பெயர் பெற்ற பைத்தானி புடவைகள் எளிதில் அடையாளம் காணக் கூடியவை என்றும், இது இந்தியாவின் மிகவும் நேர்த்தியான, மற்றும், விலை உயர்ந்த புடவைகளில் ஒன்றாக கருதப்படுகின்றன. நாடு முழுவதும் தற்போது, 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஜவுளி புத்துயிர் நிறுவனங்கள் செயல்பட்டு வருவதாகவும், பிரதமர் தெரிவித்தார். வரும் 2047ஆம் ஆண்டிற்குள், வளர்ச்சி அடைந்த இந்தியா என்ற கொள்கையின் அடிப்படையில், நாடு தற்போது வளர்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருப்பதாக பிரதமர் தெரிவித்தார்.

--------------------------------

*மன்சுக் மாண்டவியா-குஜராத்* (11)

நாட்டில் உள்ள கல்வி நிறுவனங்களை நவீனமயமாக்க வேண்டியதன் அவசியத்தை, மத்திய அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா வலியுறுத்தி உள்ளார். அகமதாபாத்தில் உள்ள குஜராத் வித்யாபீடத்தில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்று பேசிய அவர், அடிப்படைக் கல்வியை ஒருங்கிணைப்பதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். மேலும், போதை பழக்கத்தை எதிர்த்து போராட அனைவரும் ஒன்றுபட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

முன்னதாக அவர் இன்று காலை, சபர்மதி ஆசிரமத்தில் இருந்து, அகமதாபாத்தில் உள்ள குஜராத் வித்யா பீடம் வரை, ஞாயிற்றுக் கிழமை சைக்கிள் ஓட்டுதல் என்ற நிகழ்ச்சியில் பங்கேற்றார். அவருடன், மத்திய ஆயுத காவல் படையைச் சேர்ந்த பணியாளர்களும் பங்கேற்றனர்.

--------------------------------

*ஹரித்துவார்-விபத்து (9)*

உத்தராகண்ட் மாநிலத்தில் உள்ள ஹரித்துவாரில், கோவில் திருவிழா ஒன்றில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி, 6 பேர் உயிரிழந்தனர். 20 பேர் காயமடைந்தனர். வழிபாடு செய்வதற்காக ஏராளமான மக்கள் கூடி இருந்த போது, உயர் மின் அழுத்தக் கம்பி அறுந்து விழுந்ததில், இந்த விபத்து நேரிட்டதாக, காவல் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்த சம்பவத்திற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார். இதற்கிடையே, இந்த விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு 2 லட்சம் ரூபாயும், காயமடைந்தவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாயும் இழப்பீடாக வழங்கப்படும் என்று அம்மாநில அரசு அறிவித்துள்ளது.

--------------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

தமிழகத்தில், முதலாம் ராஜேந்திர சோழனை கவுரவிக்கும் ஆடி திருவாதிரை விழாவில், பிரதமர் திரு. நரேந்திர மோடி பங்கேற்றார்.

முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏபிஜே அப்துல் கலாமின் நினைவு தினத்தை ஒட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடி அவருக்கு அஞ்சலி செலுத்தினார்.

இந்தியாவின் மதிப்பு சர்வதேச அளவில் உயர்ந்து வரும் நிலையில், வரும் ஆண்டுகளில், தேசப் பாதுகாப்பு சவால்களும் அதிகரிக்கும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

விண்வெளி வீரர் சுபான்ஷூ சுக்லா பூமிக்கு திரும்பியது தேசத்தின் பெருமை என்று, மனதின் குரல் நிகழ்ச்சியில் பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது